**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 92/2011**

**Date :02.04.2026**

**பி. வா.சா1- ராஜவேல்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு சொந்த ஊர் தெற்கு அஞ்சுகுடியிருப்பு என்றால் சரிதான். எனது ஊர் பணிக்கன்குடியிருப்பை ஒட்டிய ஊர் என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதியின் வீடு எனது வீட்டிற்கு தெற்கே நான்கு வீடு தள்ளி உள்ளது என்றால் சரிதான். நானும் வாதியும் பூர்விகமாக எங்களுடைய தற்போது குடியிருக்கும் அவரவர் வீடுகளில் தான் குடியிருந்து வருகிறோம். இவ்வழக்கில் வழக்கு ஏ மற்றும் பி பட்டிகை என்ற 2 சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். வாதியினுடைய வழக்கு ஏ பட்டிகை சொத்தில் கிழக்கு மற்றும் வடக்கு பக்கமும் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டிகை சொத்து ஆதியில் பணிக்கன்குடியிருப்பை சார்ந்த செல்லையா நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி செல்லையா நாடாரிடமிருந்து வாதியின் தாத்தா சுடலைமுத்து விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி வாதியின் தாத்தா சுடலைமுத்து காலத்திற்கு பின்பு வாதியின் தந்தை, வாதி, வாதியின் சகோதரர் சேர்ந்து பாகம் வைத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

அவ்வாறு பாகம் வைத்ததில் வழக்கு ஏ பட்டிகை சொத்து வாதிக்கு ஒதுக்கப்ப்ட்டது என்றால் சரிதான். அவ்வாறு ஒதுக்கப்ட்ட நாளிலிருந்து வழக்கு ஏ பட்டிகை சொத்தை வாதி கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டிகை சொத்து 13 சென்ட் என்றால் சரியல்ல 8 சென்ட் என்று கூறுவார்கள் . 8 சென்ட் என்று யார் கூறினார்

எந்த ஆவணத்தில் பார்த்தேன் என்றால் ஆவணத்தை பார்க்கவில்லை. 8 சென்ட் என்று யார் கூறினார் என்று கூற இயலுமா என்றால் இயலாது.

மேற்படி பாகம் வைத்ததில் வாதிக்கு 13 சென்ட் கிடைத்தது. அதற்கு அவர் வரிசெலுத்தி கைவசம் வைத்து அனுபவித்து வந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாதியின் வழக்கு ஏ பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கம் மண் பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி மண் பாதை அரசு புறம்போக்கு பாதை என்றால் சரிதான். மேற்படி மண் பாதை தான் இவ்வழக்கின் வழக்கு பி பட்டிகை சொத்து என்றால் சரிதான். மேற்படி வழக்கு பி பட்டிகை சொத்தினை ஒட்டி வடக்கு பக்கம் என்னுடைய சொத்து என்றால் சரிதான். எனது சொத்தின் விஸ்திரணம் என்ன என்றால் 1 ஏக்கர் 30 சென்ட். மேற்படி மண் பாதை தெங்கம்புதூர்-பள்ளம் ரோடிலிருந்து தொடங்கி மேற்காக வழக்கு பட்டிகை சொத்தினை கடந்து அஞ்சுகுடியிருப்பு- மலையணிந்தன்குடியிருப்பு ரோடு வரை சென்று முடிகிறது. மேற்படி மண் பாதை ஆதியிலிருந்து காலம் காலமாக உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி மண் பாதை எந்த பஞ்சாயத்திற்கு உட்பட்டது என்றால் தெங்கம்புதூர் பஞ்சாயத்து. மேற்படி பாதை தற்போது நாகர்கோவில் நகராட்சியின் கீழ் வரும் என்றால் சரிதான். மேற்படி மண் பாதையை தார் ரோடாக மாற்றுவதற்கு 25.01.2011 அன்று அளப்பதற்காக வந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அளப்பதற்கு வருவதற்கு முன்பாக எனக்கோ சுற்றிக் குடியிருக்கும் நபர்களுக்கோ ஏதேனும் அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் இல்லை. மேற்படி 25.01.2011 அன்று அளவீடு செய்கையில் நான் அங்கு இருந்தேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி 25.01.2011 அன்று அளவீடு செய்கையில் நான் அங்கு தான் இருந்தேன் எனக்கு அனைத்து விவரமும் தெரியும் நான்

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அவ்வாறு அரசு தரப்பில் இருந்து வந்து அளவீடு செய்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ஆக்கிரமித்து அளவீடு செய்து ரோடு போடுவதற்கு தயாரானதால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாதி 1976 ல் காம்பவுண்ட் சுவர் கட்டி தற்போது வரையிலும் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தின் விவரங்கள் அனைத்தும் நான் வழக்கறிஞருக்கு சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் பிராமாண வாக்குமூலத்தில் வாதிக்கு 13 சென்ட் கைவசம் உள்ளது என்ற விவரம் சரியாக தெரியாததால் வாதிக்கு 13 சென்ட் கைவசம் உள்ளதா குறைவாக உள்ளதா என்று எனக்கு தெரியாது. வாதிக்கு கைவச அனுபவப்படி சுமார் 8 சென்ட் புது புல எண் படி உள்ளதாக தெரிகிறது என்று நேருக்கு மாறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

எனது சொத்தின் தெற்கு பக்கம் உள்ள வழக்கு பி பட்டிகை மண் பாதையை நான் அபகரித்து மண் பாதையின் வீதியை சுருக்க முற்பட்டதால் என்னையும் இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது சொத்தின் தெற்கு பக்கம் உள்ள வழக்கு பி பட்டிகை மண் பாதையை நான் அபகரித்து மண் பாதையின் வீதியை சுருக்க முற்பட்டதால் அரசு தரப்பில் மண் பாதையை அளக்கும் சமயத்தில் மண் பாதைக்கு தெற்கே உள்ள வாதியின் சொத்தினை சேர்த்து அளந்தார்கள் என்றால் சரியல்ல.

எனக்கு தெற்கு பக்கம் உள்ள மண் பாதையில் எவ்வித உரிமையோ அவகாசமோ இல்லை மற்றும் அரசுக்கும் வாதி சொத்தில் எவ்வித உரிமையோ அவகாசமோ இல்லை என்றால் சரியல்ல. தற்போதும் மேற்படி பாதை மண் பாதையாக தான் உள்ளது என்றால் சரிதான். வாதியின் சொத்தை அபகரித்து ரீ சர்வே தயார் செய்வதற்கு 2ம் பிரதிவாதிக்கு

எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 1976 ல் பாக பிரிவினை மூலம் வாங்கிய சொத்தினை தான் தற்போதும் வாதி கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார். ஆகையால் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதியின் சொத்தினை யாரேனும் அபகரித்தால் அதனை தடுப்பதற்கு அவர்கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

என்னிடம் காட்டப்படும் எதிருரையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி எதிருரையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரிதான் என்றால் சரிதான். எனது சொத்திற்கும் வாதி சொத்திற்கும் நடுவே ஒரு மண் பாதை உள்ளது அது அரசு புறம்போக்கு பாதை என்றால் சரிதான். மேற்படி பாதையில் தார் ரோடு போடுவதற்காக அப்போதைய தெங்கம்புதூர் பஞ்சாயத்திலிருந்து அளக்க வந்தார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை. மேற்படி மண் பாதையை தார் ரோடாக போடுவது அங்கே இருக்கும் நபர்களுக்கு உபயோகம் தான் என்றால் சரிதான்.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**